**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**முகாமைத்துவ கற்கைகள் பீடம்**
**மனிதவள முகாமைத்துவ உயர்தர சான்றிதழ் கற்கைநெறி**
**HRC2501 – மனிதவள ஊழியருக்கான முகாமைத்துவம்**
**இறுதிப்பரீட்சை - 2024**
**காலம் - மூன்று (03) மணித்தியாலங்கள்**

123

திகதி: 26.10.2024 நேரம்: 09.30 மு.ப. – 12.30 பி.ப.

**அறிவுறுத்தல்கள்:**

- பகுதி I ஆனது 40 புள்ளிகளுக்கு 20 வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி Iல் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து எடுத்து சரியான விடையின் கீழ் **கோடிடுக** அல்லது **வெற்றிடங்களை நிரப்புக. பகுதி I ற்கான வினாக்களுக்கு இவ் வினாத்தாளிலேயே விடையளிக்க வேண்டும்.**
- பகுதி II ஆனது 30 புள்ளிகளுக்கு ஒரு சிறிய சம்பவக் கற்கையைக் (Case study) கொண்டுள்ளது. இது **கட்டாய வினாவாகும். பகுதி IIல் உள்ள சகல வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள விடைத்தாள் புத்தகத்தில் (Answer booklet) விடையளிக்கவும்.**
- பகுதி III ஆனது 30 புள்ளிகளுக்கு கட்டுரை வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி IIIல் உள்ள 03 வினாக்களில் **ஏதேனும் 02 வினாக்களுக்கு விடையளிக்க** வேண்டும். **பகுதி IIIல் உள்ள வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள விடைத்தாள் புத்தகத்தில் விடையளிக்க வேண்டும்.**
- **பகுதி I மற்றும் பகுதி II இன் அனைத்து வினாக்களும் கட்டாயமான வினாக்களாகும். பகுதி I, II மற்றும் III அனைத்துக்குமான விடைகளை ஒன்றாக சமர்ப்பிக்கவும்.**
- தெளிவற்ற கையெழுத்து புள்ளிகளை குறைப்பதற்கு வழிவகுக்கும்.

**சுட்டெண்:................................**

## பகுதி I

**(அனைத்து வினாக்களும் கட்டாய வினாக்கள்)**

1. கீழ்க்கண்ட முகாமைத்துவச் தொழிற்பாடுகளில் எது பிரதானமாக பணிகள் மற்றும் வளங்களை திணைக்களங்களுக்கு ஒதுக்கீடு செய்தலுடன் தொடர்புடையது?

   a. நெறிப்படுத்தல் b. ஒழுங்கமைத்தல்

   c. திட்டமிடல் d. கட்டுப்படுத்தல்

2. முகாமைத்துவத்தில் விளைதிறன் என்பது:

a. குறைந்தளவு உள்ளீடுகளிலிருந்து அதிக வெளியீடுகளை உருவாக்குதல்

b. ஒரு நிறுவனமானது அதன் இலக்குகளை அடையும் அளவு

c. இழிவளவு வள விரயத்துடன் இலக்குகளை அடைதல்

d. மக்களை ஊக்குவிக்க செல்வாக்கினைப் பயன்படுத்தல்

3. பின்வருவனவற்றில், முகாமைத்துவத்தில் 7Ms இன் கீழ் குறிப்பிட்டுள்ள வளங்களில் ஒன்று அல்லாதது எது?

a. மனித பலம்

b. இயந்திரங்கள்

c. சந்தைப்படுத்தல்

d. கட்டுப்படுத்தல் முறைகள்

4. பின்வருவனவற்றில், ஒரு முகாமையாளர் இரக்கத்தை (Empathy) வெளிப்படுத்தும் ஒரு வழி என்ன?

a. தெளிவான இலக்குகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை அமைப்பதன் மூலம்

b. ஒரு பணியாளரின் அதிகப் படியான பணிசுமையை புரிந்து கொண்டு நிவர்த்தி செய்வதன் மூலம்

c. விளைதிறனாக பணிகளைக் கையளிப்பதன் மூலம்

d. சரியான தீர்மானம் எடுப்பதன் மூலம்

5. Robbins மற்றும் Coulter (2018) இன்படி கட்டுப்படுத்தல் தொழிற்பாட்டின் பண்பாக அல்லாதது எது?

a. பொதுமை (Universality)

b. தொடர்ச்சி (Continuity)

c. வினைத்திறன் (Efficiency)

d. இயங்கியல்நிலை (Dynamism)

6. பின்வருவனவற்றில் எது அகச் சூழலின் ஒரு பகுதியாக அல்லாதது?

a. உரிமையாளர்கள் மற்றும் பங்குதாரர்கள்

b. பணிப்பாளர்கள் மற்றும் முகாமைத்துவம்

c. அரச அதிகார ஒழுங்கமைப்புக்கள்

d. நிறுவன கலாச்சாரம்

7. ஓர் நிறுவனத்தின் பௌதீக கட்டமைப்புடன் தொடர்புடைய கட்டுப்படுத்தல், உதாரணமாக இயந்திரங்கள் மற்றும் தகவல் தொழிநுட்பம் போன்றவை யாது?

a. தொழிநுட்பக் கட்டுப்பாடு (Technical control)

b. ஏதேச்சதிகாரக் கட்டுப்பாடு (Bureaucratic control)

c. நேரடிக் கட்டுப்பாடு (Direct control)

d. வெளியீட்டுக் கட்டுப்பாடு (Output control)

8. பின்வருவனவற்றில் எது சிறந்த முகாமையாளர்களின் பண்பு ஒன்று அல்லாதது?

a. சிறந்த தொடர்பாடல்

b. நிதிசார் நிபுணத்துவம்

c. இரக்கம்

d. நம்பகத்தன்மை

9. Weber என்பவர் ஒரு நிறுவனமானது ...................... மற்றும் பகுத்தறிவு அடிப்படையில் முகாமை செய்யப்பட வேண்டுமென கருதினார்.

a. தனிப்பட்ட

b. பாரபட்சமான

c. ஆள்சாரா நிலை

d. மேற்கூறிய எதுவும் அல்ல

10. Bass என்பவரின் (2019) கருத்துப்படி பின்வருவனவற்றில் எது தலைவரை சிறப்பாக வரையறுக்கின்றது?

a. சக்தியால் மற்றவர்களைக் கட்டுப்படுத்தும் நபர்

b. ஒரு இலக்கையடைய விருப்பத்துடன் ஈடுபட மற்றவர்களை ஊக்கவிக்கும் நபர்

c. வளங்களை வினைத்திறனுடன் முகாமை செய்யும் நபர்

d. முரண்பாடுகளை தவிர்க்கும் நபர்

11. French மற்றும் Ravan என்பவர்களால் இனங்காணப்பட்ட ஐந்து அதிகாரங்களின் மூலாதாரங்களில் (Sources of power) ஒன்றல்லாதது?

a. சட்டபூர்வமான அதிகாரம் (Legitimate Power)

b. வெகுமதி சார் அதிகாரம் (Reward Power)

c. ஒன்றிணைக்கும் அதிகாரம் (Collaborative Power)

d. வற்புறுத்துகை அதிகாரம் (Coercive Power)

12. குமார் என்பவரின் (2011) கருத்தின்படி, நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு தலைவருக்கு அவசியமாக காணப்பட வேண்டியது எது?

a. மாற்றங்களுக்கு ஏற்ப நெகிழ்வுத்தன்மை

b. ஊழியரை தண்டிக்கும் திறன்

c. குறிக்கோள்களை அடைவதில் ஆழ்ந்த அர்ப்பணிப்பு

d. முறையான அதிகாரத்தினை பயன்படுத்தல்

13. பின்வரும் சூழல்களில், "வளங்கள்" எச் சூழலின் ஓர் பகுதியாகும்?

a. பணி சூழல் (Task environment)

b. பொது சூழல் (General environment)

c. வெளியக சூழல் (External environment)

d. மேற்கூறிய எதுவும் அல்ல

கிளை முகாமையாளர்கள் வெவ்வேறு தலைமைத்துவப் பாணிகளை கொண்டிருப்பினும், அனைத்து முகாமையாளர்களும் தங்கள் இலக்குகளை அடைந்தனர். சேதுமினது கிளை மிகப் பெரிய இலக்கைக் கொண்டிருந்தாலும், எந்தத் தவறும் மற்றும் சேதமுமில்லா உற்பத்திகளை சரியான நேரத்தில் விநியோகம் செய்தது. தலைமை அலுவலகம் ஏனைய கிளைகளிலிருந்து சில சேதமடைந்த உற்பத்திகளைக் கண்டறிந்தாலும், அவர்கள் இந்த சிக்கலை சரி செய்து கட்டளையை முடிவுக்கு கொண்டு வர முடிந்தது. மேலும், வாடிக்கையாளர் உறவினையும் வெற்றிகரமாகப் பராமரிக்க முடிந்தது.

**வினாக்கள் :**

1. தலைமைத்துவம் எனும் சொல்லை வரைவிலக்கணப்படுத்துக. (03 புள்ளிகள்)
2. வெவ்வேறு கிளை முகாமையாளர்கள் பயன்படுத்தும் தலைமைத்துவப் பாணிகள் மற்றும் தீர்மானம் எடுக்கும் மாதிரிகளை இனங்கண்டு அவற்றை சுருக்கமாக விளக்குக? (16 புள்ளிகள்)
3. பின்வரும் கூற்றினை சம்பவக் கற்கையில் உள்ள சான்றுகளை பயன்படுத்தி விளக்குக: "ஓர் நிறுவனத்திற்கு, ஏதேச்சதிகாரத் தலைமைத்துவ பாணியானது (Bureaucratic leadership style) எப்போதும் மோசமான தலைமைத்துவப் பாணியாகவே காணப்படும்." (06 புள்ளிகள்)
4. சேதும் என்பவர் நியாயமற்ற நிலைமையினை (unfairness) எதிர் கொண்டதாகக் கருத்தில் கொண்டு இந்தச் சம்பவக் கற்கையில் மீறப்பட்டுள்ள முகாமைத்துவ கொள்கை யாது என்பதனை இனங்காண்டு குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
5. மேற்தரப்பட்ட வினாவில் இனங்காணப்பட்ட முகாமைத்துவக் கொள்கையினை ஓர் உதாரணத்துடன் விளக்குக? (03 புள்ளிகள்)

**- பகுதி IIன் நிறைவு –**

## பகுதி III
## (ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக)

**வினா 01**

"வேறுபட்ட முகாமைத்துவ மட்டங்களிற்கேற்ப, தேவையான பல்வேறு வகையான முகாமை திறன்களின் அளவு மாறுபடும்." மேற்கண்ட கூற்றை பொருத்தமான விளக்கப்படத்தினை பயன்படுத்தி விளக்குக. (15 புள்ளிகள்)

**வினா 02**

"திட்டமிடத் தவறுதல் என்பது தோல்வியைத் திட்டமிடுவதாகும்." மேற்கண்ட கூற்றுடன் நீங்கள் உடன்படுகின்றீர்களா? இதற்கான 5 நியாயங்களை வழங்கவும். (15 புள்ளிகள்)

**வினா 03**

a. கையளிப்பு (Delegating) என்பதனால் கருதப்படுவது யாது? விளக்குக. (05 புள்ளிகள்)
b. பொருத்தமான விளக்கப்படத்தினை கொண்டு அதிகாரக் கையளிப்பு செயன்முறையை விபரிக்குக? (10 புள்ளிகள்)

**- பகுதி IIIன் நிறைவு -**

**- பதிப்புரிமையுடையது -**